# தேவனோடு

## அமைதியில்...



# தேவனோடு

## அமைதியில்...

*(பாட ஆதாரம்: Christian Resources App > Audio Sermons > Columbus Convention > 1983 Columbus Convention > Art Jezuit – Great Things Come Out Of Silences)*

**FFNC**
**Publications**

# தேவனோடு அமைதியில்...

*(மேற்கு நாடுகளில்,) இயற்கையின் அழைப்பின்பேரில், ஆண்டின் இந்த வசந்த காலத்தின்போது, பறவைகள் தெற்கிலிருந்து இடம்பெயர்ந்து வருவதை நம்மால் காண முடிகிறது. பனிகாலத்தின் வெண்படலம் உருகி, மெல்ல மெல்ல இளஞ்சூடான தட்பவெப்ப நிலை நிலவி வருவதையும் நம்மால் உணர முடிகிறது. ஏதோ! பூமி நீண்ட உறக்கத்திற்குப் பின் விழித்தெழுவது போல் உள்ளது. ஆனால், ஆச்சரியம் என்னவெனில், இயற்கையில் இந்தச் சக்திகள் இயங்குவதை நம்மால் வெளிப்படையாக பார்க்க முடியாவிட்டாலும், அவை அனைத்தும் திரைமறைவாக இயங்கிக்கொண்டுத்தான் இருக்கின்றன. கண்ணால் பார்க்கக்கூடிய விஷயங்களுக்குப் பின்னால், கண்ணுக்குத் தெரியாத இயற்கையின் அற்புதமான தனி ஓர் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இயற்கையெங்கிலும், கவனித்துப் பாருங்களேன், வேதியியல் வினைகளும் எதிர்வினைகளும் சத்தமில்லாமல் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன.*

*எண்ணற்ற செடிகள் பூப்பதற்குக் பின்னால், எண்ணற்ற உயிரணுக்கள் தங்கள் வேலையைச் செய்துகொண்டிருக்கின்றன. ஈரமான நிலத்திற்கு அடியில், வேர்கள் தாவர வாழ்க்கைக்கு அவசியமான நீரை உறிஞ்சி தாவரம் சாகாமல் பார்த்துக்கொள்கின்றன. ஈர்ப்பு விசையை எடுத்துக் கொள்ளுங்கள்—அதுவும்கூட சத்தமில்லாமல் செயல்பட்டு வருகின்றன!!! சூரியனின் அக்டினிக் (Actinic) கதிர்களும் அப்படியே. இந்த அக்டினிக் கதிர்கள் என்பவை ஊதா மற்றும் புற ஊதா கதிர்கள் ஆகும்; இந்த ஒளிக்கதிர்களே தாவரங்களில் வேதியியல் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இந்தச் செயல்பாடுகளின் வெளிப்படையான வெளிப்பாடுகளைக் கண்டு நாம் வியப்படைகிறோம். இவை அனைத்தையும் பேரண்ட பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்த தேவனே உருவாக்கினார் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கிறோம்.*

*இவற்றை வைத்துப் பார்க்கும் போது, சத்தமில்லா அமைதியிலிருந்து மகத்தானவை பிறக்கின்றன என்பதை நம்மால்*

அடையாளங்கண்டுகொள்ள முடிகிறது. வான்வெளியின் சத்தமில்லா அமைதியில், இரவுநேர வானத்தை அலங்கரிக்கும் மாபெரும் கோள்கள் வலம் வருகின்றன. மரங்கள் எனும் அமைதியான தொழிற்சாலைகளிலிருந்து ஆரஞ்சு, ஆப்பிள், பீச் போன்ற பழங்கள் கிடைக்கின்றன. எங்கிருந்தோ சத்தமில்லாமல் வரும் காற்றானது ஆழ்கடலின்மீது அடித்து, நீரை நுரையாக மாற்றுகின்றது. ஆங்கில எழுத்தாளர் ஒருவர், " நாம் சத்தமில்லா அமைதியின் ஊடே ஆலயங்களை உருவாக்குகிறோம்" என்று கூறியுள்ளார். ஆனால், பாருங்கள்! மலைகளிலும், புல்வெளிகளிலும், பாதையற்ற காடுகளிலும் ஏற்கெனவே எண்ணற்ற கண்ணுக்குப் புலப்படாத இயற்கையின் அதிசயங்கள் தென்படுகின்றனவே!

ஆபிரகாம் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தபோது, அவர் அதிக நேரத்தை அமைதியில் கழிக்க நேர்ந்தது. மோசே தன் மாமனார் எத்திரோவின் மந்தைகளை மேய்த்த போதும் அப்படியே செய்தார். இப்படியாக இந்த முற்பிதாக்கள் அமைதியாகச் செயல்பட்டு வந்த அந்த மாபெரும் பேராற்றல்களுடன் தொடர்புக்குள் வந்ததன் மூலம் வல்லவர்களானார்கள் என்றால் அது மிகையாகாது. குறிப்பாக, இயேசுவை நாம் கவனிக்கலாம். அவர் அமைதியை நேசித்தார் (குறிப்பாக தேவனோடு அமைதியில் கழிக்கும்



பொழுதை மிகவும் நேசித்தார்). தன் பிதாவின் வல்லமையின் கண்ணுக்குத் தெரியாத செயல்பாடுகளில் இன்னும் முழுமையாக ஈடுபடுவதற்காகவும், பிதாவின் அன்பான சத்தத்தைக் கேட்பதற்காகவும் அவர் அடிக்கடி தனிமையில் நேரத்தைச் செலவிட்டார்.


*எழுத்தாளன் ஒருவர் கூறுகையில்,*

> *" சிந்தனையாளர்கள் அமைதியில் நீண்ட நேரம் ஆழ்ந்திருப்பார்கள், பின்னர் அவர்கள் வெளிவந்து பேசும்போது அவர்களின் பேச்சாற்றல் நம்மை ஆட்கொண்டுவிடுகிறது. கலையும் அப்படித்தான். ஒரு சிறந்த ஓவியத்தைப் பார்க்கும்போது, அதன் அற்புத அழகைக் கண்டு, நமது உள்ளம் உவக்கிறது. ஆனால் அந்த ஓவியத்திற்குப் பின்னால் உள்ள முழு கதையையும் நாம் அறிவோமா? அந்த அழகைக் கொண்டு வருவதற்கு, பல வருட சிந்தனைகளும், அயராத உழைப்பும் இருந்திருக்குமல்லவா! அல்லது உங்களை ஆச்சரியப்படுத்தும், உற்சாகப்படுத்தும் ஒரு புத்தகத்தைக்கூட எடுத்துக்கொள்ளுங்கள்;" (நமது பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துகளைப் போல) " அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் வாழ்ந்து, போராடி, உழைத்து, துன்பப்பட்டு, கண்ணீர் வடித்து எழுதிய அந்த வார்த்தைகள் இப்போது நம்மைத் தூண்டி நமக்கு உதவுகின்றன. மனிதர்களை ஆசீர்வதிக்கும் ஒவ்வொரு நல்யோசனையும் பிறந்து, அழகான வடிவத்தைப் பெற்று ஓர் ஆசீர்வாதமாக மாறுவதற்கு முன்பு, அது இருண்ட கருவறையொன்றில் கருவுறுகிறது.*
>
> *நமது செயல்கள் அனைத்தும் முதலில் எண்ணங்களில் கருவுறுகின்றன. கலைஞனின் ஓவியம், கவிஞனின் கவிதை, பாடகனின் பாடல், கட்டிடக் கலைஞனின் கட்டிடம் – இவை அனைத்தும் அழகிய வடிவம் பெறுவதற்கு முன்பு, எண்ணங்களாகவே காணப்பட்டன."*

அவை முதலில் சிந்தை எனும் அமைதியான அறைகளில் காணப்பட்டன, வசந்த காலத்தில் நாம் கவனிக்கும் அப்பேர்ப்பட்ட மறுரூபமாகும் ஆற்றலைப் போன்றதொரு ஆற்றலை, அவை உருவாக்குகின்றன. கண்ணுக்குத் தெரிந்த மற்றும் தெரியாத இந்த இயற்கை விஷயங்களுக்குப் பின்னால், பெரிய ஆவிக்குரிய விஷயங்கள் காணப்படுகின்றன. அந்த அந்தரங்க மறைவான இடங்களில்தான் நம்மை தேவ சாயலில் கட்டியெழுப்பும் சத்தியத்தின் கூறுகளை நம்மால் அடையாளங்காண முடிகிறது. இது வாழ்க்கையின் பரபரப்பிலும், இரைச்சலிலிருந்தும் நமக்கு வருவதில்லை – அதில் நம்மால் தெளிவாக மாபெரும் உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியாது. மாறாக, அமைதியில்தான், பல வலிமையான உண்மைகளை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.


இந்த வசந்த காலத்தில், இந்த நினைவுகூருதல் காலத்தில், நம் இருதயங்களிலும் சிந்தைகளிலும் உள்ள அமைதியான அந்தரங்கத்திற்குள் சென்று, அங்கு ஆவிக்குரிய மகத்தான விஷயங்கள் நடக்கின்றனவா அல்லது பின்வரும் ரீதியில் உள்ளனவா என்பதை நிதானித்துப் பார்ப்போமாக:

- ஏதோ உயிர் வாழ வேண்டுமே என்று வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?
- நமது ஆவிக்குரிய உயிர்த்துடிப்பு உறங்கிக் கொண்டிருக்கிறதா?
- நாம் ஒருவித மந்த நிலையில் காணப்படுகிறோமா?
- “யார் கவலைப்பட போகிறார்கள்?” (Who cares?) என்று சொல்லும் மனநிலையில் காணப்படுகிறோமா?



நவீன தோட்டக்கலை நிபுணர்கள், “ குளிர் காலத்திற்குப் பிறகு வரும் வசந்த காலத்தில், உங்கள் மரங்கள் விழித்தெழுந்து வளர வேண்டுமானால், மரத்தின் தண்டுப்பகுதியை ஒரு மண்வெட்டியால் தட்ட வேண்டும் அல்லது ஒரு ரப்பர் குழாயால் அடிக்க வேண்டும். அப்போதுதான் தண்டிலிருந்து கிளைகளுக்கும் இலைகளுக்கும் சாறு பாயும்” என்று கூறுகிறார்கள். இதைக் கேட்கும்போது இது ஒரு கடுமையான சிகிச்சை போலத் தோன்றும். ஆனால், ***1 கொரிந்தியர் 9 : 2 7*** - இல் அப். பவுல் பயன்படுத்திய முறையும் இதுவே–

***“மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.”*** இதன் அர்த்தத்தைப் பார்த்தால், ***“நான் என் உடலை அச்சுறுத்தி (browbeat) அதை என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறேன்”*** என்பதாகும்.



இது சுயபரிசோதனைக்கான காலம். நாம் நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டிய காலம். இது நம்முடைய பழைய புளித்த மாவை அகற்ற வேண்டிய காலம். நம்முடைய கிறிஸ்தவப் பயணத்தில், கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் புளிப்பை அகற்றுவதை அநுதினமும் செய்ய வேண்டியதில்லை என்பதாக அல்லாமல், மாறாக குறிப்பாக ஆண்டின் இந்தப் பருவத்தில் நம் இருதயங்கள் மற்றும் சிந்தைகளின் அந்தரங்க இடங்களை ஆராய்ந்து பார்த்து, ஆவிக்குரிய மகத்தான காரியங்கள் நடக்கின்றனவா அல்லது ஒருவேளை, ஆவிக்குரிய முன்னேற்றத்தில் குறுக்கிடும் தடைகளாக இருக்கும் சில விஷயங்களை நாம் அகற்ற வேண்டுமா? என்று பார்க்க வேண்டும்.

*"**நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்**" என்று **2 கொரிந்தியர் 13:5**-இல் பரி. பவுல் நமக்குச் சொல்கிறார். கொரிந்தியரோ பவுல் தங்கள் மீது எந்த நல்ல செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை என்றும், அவருடைய ஊழியமும் பலவீனமாகவும் அற்பமாகவும் இருந்தது என்றும் குற்றம் சாட்டியதாக பதிப்பானது காட்டுகின்றது. நாம் அறிந்தபடி, பரி. பவுல் அவர்களுக்குப் பதிலளிக்கும்போது, அவர்களுடைய தற்போதைய நிலையை நிதானித்துப் பார்த்து, அதை கடந்த காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்படியாகவும் கூறுகிறார். அதாவது, அவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலமாக அவர்களின் வாழ்க்கையில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்று பார்க்கச் சொல்கிறார்.*

*மீண்டும் **1 கொரிந்தியர் 11:28**-இல், அதே அப்போஸ்தலன், "**எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்**" என்று கூறுகிறார். கர்த்தருடைய பந்தியில் பாத்திரவான்களாகப் பங்குபெற ஆயத்தமாவதற்குத் தேவையான ஓர் எச்சரிப்பாக மட்டுமே பவுல் இங்கே இதனைக் குறிப்பிடுகிறார். நம்முடைய நிகழ்காலத்தைப் பார்ப்பதன் மூலம் நம்மால் நம்மை முழுமையாக அறிந்துகொள்வது சாத்தியமற்ற ஒன்றாகும். கடந்த கால வாழ்க்கையைப் பார்க்கும்போது, நம்மால் ஓரளவுக்கே நம்மை அறிந்துகொள்ள முடிகிறது. ஒவ்வொரு நாளும் நம் செயல்கள் நம்மை ஆச்சரியப்படுத்துகின்றன. (உங்கள் செயல்கள் உங்களை ஆச்சரியப்படுத்துகின்றனவா என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் என்னுடையவை என்னை ஆச்சரியப்படுத்துகின்றன!!!) நாம் ஒருபோதும் செய்யமாட்டோம் என்று நினைத்த காரியத்தையே நாம் அடிக்கடி செய்துவிடுகிறோம்.*

*ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடும்படி அழைக்கப்படும் வரை*

தனது விசுவாசத்தின் வலிமையை உண்மையில் அறிந்திருக்க வில்லை. அந்தச் சோதனையினிமித்தம், அவரால் தன்னுடைய விசுவாசத்தின் உண்மையான வலிமையை மதிப்பிட முடிந்தது. நினைவாற்றல் குறைவினால், கடந்த கால தவறுகளிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள தவறுகிறோம். நம்முடைய ஒவ்வொரு செயலிலும் பல நுண்ணிய விவரங்கள் உள்ளடங்கியுள்ளன, அவை பலவிதமான வேறு செயல்களுக்கு வழிவகுக்கின்றன – இந்தச் செயல்களில் ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபடவும் செய்கின்றன, இப்படிச் சங்கிலி தொடர் போன்றுள்ள நம்முடைய செயல்களினிமித்தமாக நம்முடைய சொந்த நிலையை உண்மையாகச் சீர்தூக்கிப் பார்ப்பது என்பது நமக்குச் சாத்தியமற்றதாகிவிடுகிறது. நினைத்த காரியத்தையே நாம் அடிக்கடி செய்துவிடுகிறோம்.

கிரேக்க தத்துவஞானிகளுக்குப் பிடித்தமான ஒரு பொன்மொழி இருந்தது, ஒருவேளை நீங்களும்கூட அதைக் கேள்விப்பட்டிருக்கக்கூடும், அது "உன்னை அறி!" (Gnothi Seauton – Know Thyself) என்பதாகும். ஆனால், இந்தத் தத்துவம், 'ஒருவர் தனது செயல்கள், தனது கடந்த காலம் போன்றவற்றை உற்றுநோக்குவதன் மூலமாக மாத்திரமே தங்களைப் பற்றி அறிந்துகொள்வார்கள்' என்பதை கற்பிக்கவில்லை. பாருங்கள் சகோதர சகோதரிகளே, பலரால் கடுமையான சுய-பரிசோதனை மூலமாக (self-introspection) சிறந்தவர்களாக வளர முடிவதில்லை. உதாரணமாக, தீயவர்கள் தங்களைச் சுய பரிசோதனை செய்தார்களேயானால், அவர்கள் எப்போதும் தங்களிடம் நன்மையையே காண்பார்கள் (தாங்கள் செய்ததெல்லாம் சரியே என்று நிதானிக்க நேரிடும்), அதிலும் கூடுதலாக, அவர்கள் தங்கள் வாழ்க்கையில் காணும் தீமைகளுக்கு ஏற்ற சாக்குப்போக்குகளையே கூறிடுவார்கள். மறுபுறம் நல்லவர்களோ, தங்களுக்குள் தீமையை மாத்திரமே உற்றுநோக்க நேரிடும், இப்படியாக தீமையை அந்த அளவிற்கு வெறுத்து, தங்கள் வாழ்க்கையைக் குறித்து வருத்தப்பட்டு, துயரத்திற்குள்ளாக நேரிடும்.

ஆரம்பக்கால 'காவற்கோபுர' (Tower) இதழ் ஒன்றில்,

*சுயபரிசோதனை பற்றிய சிறந்த ஒரு கட்டுரை உள்ளது, அதன் தலைப்பு "**ஞானத்தின் கனிகள்**" (FRUITS OF WISDOM) – R1520.* இது ***நீதிமொழிகள்** 12-ஆம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு கட்டுரையாகும், அதில் சகோதரர் அவர்கள் மிகச்சிறந்த 13 கருத்துகளை விளக்கியுள்ளார். அவை நீதிமொழிகளிலிருந்து எடுக்கப்பட்ட எளிய போதனைகளாகும், அவை மிகவும் தெளிவாகவும் நேரடியாகவும் இருப்பதால், அவற்றுக்குக் கூடுதல் விளக்கம்கூட தேவைப்படாது. குறிப்பாக ஆண்டின் இந்தப் பருவத்தில் அவை கவனமாகவும், ஜெபத்தோடும் சிந்திக்கத் தகுந்த கருத்துகளாக இருக்கின்றன.*

*ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளையும் அந்தரங்கத்தில் தேவனிடம் சென்று ஜெபிக்கும்போது, தீவிரமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஐந்து சுயபரிசோதனை கேள்விகளை நாங்கள் பரிந்துரைக்க விரும்புகிறோம்.*

*இவற்றை நமக்குள் நாமே வினாவி, நம்மை நிதானித்துப் பார்ப்போமாக:*

**1. என் இருதயத்தின் நோக்கங்கள் அனைத்தும் சுத்தமானதாகவும் நேர்மையாகவும் இருந்து, அதனிமித்தம் கர்த்தருடைய தயவு இன்னும் நீங்கவில்லை என்கிற தொடர்ச்சியான உணர்வை அவை எனக்குத் தருகின்றனவா?**

*இதற்குரிய வேத வசனம், **ஏசாயா** 52:11: "**புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம்விட்டுப் போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்; கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்.**"*

*முதலாவதாக, நாம் சுத்தமுள்ள இருதயமுள்ளவர்களாக இருக்கின்றோமா என்பதைக் கண்டறிய நம்மை நாமே*

*அமைதியாகச் சோதித்துப் பார்ப்பது மிகவும் முக்கியமானதாயுள்ளது. நம் இருதயத்தின் நிலையைக் கண்டறிய நம்மை நாமே புதிதாகச் சோதித்துப் பார்க்க வேண்டும். பின்வரும் வேதாகம வார்த்தைகளை நாம் மீண்டும் நினைவுகூரலாம்: “**நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது,** [நம்மை நாமே நிதானித்து அறிந்து நம்மை நியாயந்தீர்த்துக் கொள்ளவில்லையானால்,] **கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்**” (1 கொரி. 11:31, 32) – ஏனென்றால் நாம் நம்முடைய காரியத்தை அவருடைய கைகளில் ஒப்படைத்திருக்கிறோம், ஏனென்றால் நாம் அவருடையவர்களாய் இருக்கிறோம். 'சுத்தம்' (pure) என்ற வார்த்தையில் கபடற்ற, வஞ்சகமில்லாத என்கிற கருத்தும் உள்ளடங்கியுள்ளது. அதில் நற்பண்பு மற்றும் கற்பு/தூய்மை என்கிற கருத்தும்; தூய்மையாகவும், சுத்தமாகவும், உண்மையாகவும் இருப்பது என்கிற கருத்தும் உள்ளடங்கியுள்ளது.*

*ஆனால் பாருங்கள், சபையில் உள்ள எவருமே முழுமையான அர்த்தத்தில் உண்மையில் சுத்தமுள்ளவர்களாக இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் நமது அன்பிற்குரிய குரு, “**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்**” என்று கூறியபோது, இந்த விஷயத்தைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கான திறவுகோலை வழங்கினார் என்பதை எண்ணி நாம் மகிழ்ச்சியடைகிறோம். நாம் இப்போதுள்ள அழிவுக்குரிய/ சாவுக்கேதுவான அபூரண நிலையில் காணப்படும் வரை, முழுமையான தூய்மை/சுத்தம் என்பது சாத்தியமற்றது. ஆனால் இருதயத்தில் சுத்தமாக இருப்பது என்பது சுத்தமான, தூய்மையான உள் மனநோக்கத்தை (purity of intention and motive) கொண்டிருப்பதன் மூலமே சாத்தியமாகும்.*

*நமது அமைதியான சுயபரிசோதனையைத் தொடங்கும்போது, நம்முடைய நேரம், தாலந்து மற்றும் செல்வாக்கை நாம் ஞானமாகப் பயன்படுத்துகிறோமா இல்லையா என்று நாம் பார்க்க வேண்டும்.*

இப்படியாக நிதானித்துப் பார்க்க வேண்டிய முதல் விஷயம்: நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக இருக்கிறோமா? கர்த்தரிடம் நாம் செய்யும் ஜெபங்களில் உண்மையுள்ளவர்களாக இருக்கிறோமா? அவரைப் பிரியப்படுத்த நாம் எடுக்கும் முயற்சிகளிலும், பிதாவுடனான நமது உறவிலும் நாம் கபடற்றவர்களாகவும் நேர்மையாகவும் இருக்கிறோமா? தூய்மையான இருதயத்தோடு அவரிடம் மிகுந்த அன்பு செலுத்துகிறோமா? என்பவையாகும்.

நாம் அவ்வாறுதான் இருக்கிறோம் என்று அவ்வப்போது நாம் சொல்லலாம். ஆனால், ஒவ்வொருவரும் இந்த விஷயங்களை தங்களுக்குள்ளே நிதானித்துப் பார்க்க வேண்டும்.

பரிசோதித்துப் பார்க்கும்போது, கர்த்தருடனான நமது உடன்படிக்கை மற்றும் உறவு, அவருடைய வார்த்தையோடும் மற்றும் பிதாவோடும் தொடர்புடைய விஷயங்களில் நம் இருதயம் சுத்தமாக இல்லை என்று காண நேரிட்டால், நாம் தேவனிடம் மன்னிப்புக்கேட்க வேண்டும், அவ்வாறு கேட்காமல், அடுத்த அடுத்த காரியம் என்று சென்றுவிடக் கூடாது. கர்த்தருடைய கிருபையின் உதவியால், நாம் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாகவும், முயற்சியில் தூய்மையானவர்களாகவும் இருப்போம் என்று உறுதிபூண்டு கொள்ள வேண்டும். நம்முடைய நோக்கங்களிலும் எண்ணங்களிலும் சுயநலம் கலக்கவில்லை என்பதை நாம் உறுதிப்பண்ணி கொள்ள முடியுமேயானால், கர்த்தருடைய பார்வையில் நம்முடைய நோக்கங்கள் சுத்தமுள்ளவையாக, தூய்மையானவையாக இருக்கின்றன என்பதில் மாற்றமில்லை; அப்போது உண்மையில் நம் இருதயங்கள் மகிழ்ந்திருக்கக் கூடும்.



## 2. நம்முடைய அந்தரங்க சுயபரிசோதனைகளில், குறிப்பாக நமக்குள் எல்லாப் புளிப்பும் அகற்றப்பட்டுவிட்டனவா என்பதை நாம் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

*இதற்குரிய வேத வசனம், 2* ***கொரிந்தியர்*** *7:1: "**இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.**"*

*புளிப்பு (leaven) என்பது, நாம் அறிந்துள்ளபடி, மாவிலோ அல்லது சில நேரங்களில் திரவங்களிலோ, அவற்றைப் புளிக்க/நொதிக்க வைப்பதற்காகச் சேர்க்கப்படும் ஒரு பொருளாகும். இன்னும் குறிப்பாகச் சொன்னால், புளித்த மாவின் ஒரு பகுதியை எடுத்து, சமையல் நோக்கங்களுக்காகச் சேமித்து வைப்பதாகும். இவ்வகையான புளிப்பு காரணியை (leavening agent) எபிரெயர்கள்* ***யாத்திராகமம்*** *12:15 – இல் '**புளித்த மாவு**' (sour dough) என்று குறிப்பிடுகிறார்கள்.* ***லூக்கா*** *13:21 – இல் கிரேக்கர்களும் அவ்வாறே குறிப்பிடுகின்றனர்.*

*திராட்சப்பழம் அல்லது இதர பழங்களின் பழரசம் புளிப்பதன் மூலம் மதுபானம் (wine) உருவாவது நீண்ட காலமாக அறியப்பட்ட ஒன்றாகும். ஆனால், திராட்சரசமோ புளிப்புச் சேர்க்காமலேயே இயற்கையாகப் புளிக்கும்/நொதிக்கும்.*

*வேதாகமத்தில் புளித்த மாவு என்பது பெரும்பாலும் பாவம் அல்லது சீரழிவைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இயேசு தம் சீஷர்களிடம், "**பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்**" என்று கூறி, அது "**மாய்மாலம் / மாயம்**" (hypocrisy) என்றும் விளக்கினார். சீஷர்கள்*

*முதலில் நம்முடைய கர்த்தரின் அடையாள பாஷையைப் (symbolism) புரிந்துகொள்ளவில்லை, இறுதியில்தான், அவர் தப்பறையான போதனைகள் மற்றும் மாய்மாலமான நடைமுறைகளைக் குறித்து தங்களை எச்சரித்துள்ளார் என்பதைப் புரிந்துகொண்டார்கள். இது* ***மத்தேயு 16:6, 11, 12*** *மற்றும்* ***லூக்கா 12:1*** *ஆகிய வசனங்களில் நம் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.*

*மேலும்,* ***மாற்கு 8 : 1 5*** *– இல் ஏரோதைக் குறித்து அவர் எச்சரித்ததை நாம் கவனிக்கிறோம்: "****நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்தும் ஏரோதின் புளித்தமாவைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.****" பரிசேயர்களின் வெளிவேஷத்தைக் குறித்து இயேசு அவர்களை மாயக்காரர்கள் என்று பகிரங்கமாகக் கண்டித்தார் (****மத்தேயு 2 3 : 2 5 – 2 8****). சதுசேயர்களின் தவறான உபதேசரீதியிலான பார்வைகளை அவர் சுட்டிக்காட்டினார்.* ***மத்தேயு 2 2 : 1 5 – 2 1*** *– இல் ஏரோதின் ஆதரவாளர்களின் அரசியல் வஞ்சனையில் இருந்த மாயத்தையும் அவர் அம்பலப்படுத்தினார்.*

*அப்போஸ்தலனாகிய பவுலும்கூட இதே அடையாளத்தைப் பயன்படுத்தினார். கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவ சபையிலிருந்து ஒழுக்கக்கேடான மனிதன் ஒருவனை வெளியேற்றும்படி அவர் கட்டளையிடுகையில், "* ***கொஞ்சம் புளித்தமா பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே****" என்று கூறினார். பின்னர் புளித்த மாவு என்பதன் மூலம் அவர் எதைக் குறிப்பிட்டார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறார்:* ***"ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடும் அல்ல, துப்புரவு (sincerity/நேர்மை – திருவிவிலியம்), உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரிந்தியர் 5:6 – 8).*** *பவுல் இங்கே பஸ்கா நினைவுகூருதல் ஆசரிப்புக்கு முன்னதாக வரும் யூதர்களின்*

*புளிப்பில்லாத அப்பப் பண்டிகையிலிருந்து கிடைக்கும் நிழலான பாடத்தைக் குறித்து (typical lesson) விளக்குகிறார்.*

*கொஞ்ச புளித்தமா எப்படி முழு மாவையும் புளிப்பாக்குகிறதோ, அதேபோல அந்த ஒழுக்கக்கேடான மனிதனின் சீர்கேடான செல்வாக்கை அகற்றாவிட்டால், சபையானது கர்த்தருடைய பார்வையில் அசுத்தமாகிவிடும். இஸ்ரயேலர்கள் பஸ்காவின் போது தங்கள் வீடுகளில் புளித்த மாவை வைத்திருக்கக்கூடாது என்பதைப் போலவே, அவர்களும் (சபையும்) தங்கள் மத்தியிலிருக்கும் புளித்த மாவை அகற்ற வேண்டும் என்கிற ரீதியில் கூறுகிறார்.*

*புளித்த மாவு என்பது சீரழிவோடு தொடர்புடையது என்பதை எபிரெயர்கள் மட்டுமல்லாது மற்ற புறஜாதி மக்களின் மனங்களிலும் இருந்ததை நாம் கவனிக்கிறோம். புளூட்டாக் (Plutarch) என்ற கிரேக்க வாழ்க்கை வரலாற்றாசிரியர் (Greek biographer), "புளித்தமா என்றாலே அது சீரழிவின் பிள்ளையாகும் (கெட்டுப்போக வைக்கும் வஸ்து ஆகும்), அது தான் கலக்கப்படும் மாவின் முழுப் பகுதியையும் கெடுத்துவிடுகிறது" என்று கூறியிருந்தார். **ஆமோஸ் 4:5** – இல், வழிதவறிய இஸ்ரயேலர்களிடம் யேகோவா தேவன் ஒருவித முரண்வாக்கிய பாணியில் (irony) பேசுவதாகக் காண்கிறோம்: "**புளித்தமாவுள்ள ஸ்தோத்திரபலியோடே தூபங்காட்டி, உற்சாக பலிகளைக் கூறித் தெரியப்படுத்துங்கள்; இஸ்ரயேல் புத்திரரே, இப்படிச் செய்வதே உங்களுக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.**" அதாவது, 'பெத்தேலிலும் கில்காலிலும் அவர்கள் செய்யும் எல்லா வழிபாடுகளும் தமக்கு எதிரான மீறுதலாக இருந்தன, எனவே அவர்கள் பலிபீடத்தின் மீது புளிப்பில்லாத அப்பத்தோடு, புளித்த மாவு போன்று, கட்டுப்பாடின்றி எதை வேண்டுமானாலும், படைக்கட்டும்' என்கிற ரீதியில் தேவன் அவர்களிடம் கூறினார். அவர்கள் விக்கிரக ஆராதனை செய்துகொண்டிருந்ததால், அவர்கள் பலி செலுத்தினாலும், அவை அனைத்தும் வீணாகவே கருதப்பட்டன!*

*இஸ்ரயேலர்கள் தங்கள் வீடுகளையும் நிலங்களையும் எந்தவொரு புளித்த மாவும் இல்லாதபடி, எவ்வளவு துல்லியமாகவும் முழுமையாகவும் (கண்ணும் கருத்துமாக) சுத்தம் செய்தார்கள் என்பதை நீங்கள் எப்போதாவது யோசித்துப் பார்த்ததுண்டா? (**யாத்திராகமம் 12:15**). **யாத்திராகமம் 12:15** மற்றும் **13:7**-இல் குறிப்பிடப்பட்டுள்ள அந்த முழுமையான சுத்தம் செய்யும் முறையானது இக்காலம் வரை பின்பற்றப்படுவதை நாம் காண்கிறோம்.*



*அவர்கள் தங்கள் மாவு பிசையும் பாத்திரங்கள், ரொட்டி சமைக்கும் பாத்திரங்கள், ஏன் தங்கள் டோஸ்டர்களைக் கூட (toasters) ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்கள்; இடுக்குகளில் ஒரு சிறிய ரொட்டித் துணிக்கை (crumb) இருப்பதற்குச் சாத்தியம் இருந்தால் கூட அவர்கள் அதை வைத்துக்கொள்வதில்லை. ஆண்டின் இந்தப் பருவத்தில் தங்கள் வீட்டில் ஒரு சிறிய துணிக்கை இருப்பதை விட, அந்தப் பொருளையே தூக்கி எறிவதை அவர்கள் மேலாகக் கருதுகிறார்கள். நம்முடைய இருதயங்கள் மற்றும் மனங்களிலிருந்து பழைய புளித்த மாவை அகற்றுவதில் நாம் இந்த அளவிற்குக் கவனமாகவும் முழுமையாகவும் (கண்ணும் கருத்துமாக) இருக்கிறோமா? சிந்திக்கலாம்!*

பழைய புளித்தமா என்பது நீண்ட / கொடிய பாவங்களைக் குறிக்கிறது. 'துர்க்குணம் / வன்மம்' (Malice) என்பது கெட்ட எண்ணம், வெறுப்பு மற்றும் இருதயத்தின் தவறான நிலையைக் குறிக்கிறது. வாக்குவாதம், புறம்பேசுதல் (backbiting), பிறர்பேரில் தீமையான அனுமானங்களை / சந்தேகங்களை ஊகிப்பது (evil surmising) மற்றும் மாம்சம் மற்றும் பிசாசின் பிற கிரியைகளும் இதில் அடங்கும். நம் இருதயத்தின் எந்தப் பகுதியிலாவது இதில் ஒரு சிறிய துணிக்கை மிஞ்சியிருந்தாலும், நம்முடைய இருதயம் தூய்மையானவை/சுத்தமானவை அல்ல.

உதாரணமாக, உங்களுக்கு நெருக்கமான ஒருவர், உங்கள் குடும்பத்தினர் அல்லது சகோதர சகோதரிகளில் ஒருவர் ஒரு புதிய வீட்டை வாங்கியிருக்கலாம், அல்லது புதிய வீட்டு உபயோகப் பொருட்களை அல்லது புதிய கார் ஒன்றை வாங்கியிருக்கலாம். "ஏன் இரண்டு பேருக்கு இவ்வளவு பெரிய வீடு தேவை? ஏன் இவ்வளவு ஆடம்பரமான அலங்காரங்கள்? நான் அங்கு சென்றபோது பழையவையே நன்றாகத்தானே இருந்தன? ஏன் இவ்வளவு பெரிய ஆடம்பரமான கார்? பழைய காரில் எந்தக் குறையும் இல்லையே?" என்பது போன்ற எண்ணங்கள் உங்கள் மனதிற்குள் வருகிறதா அல்லது வாயின் வார்த்தைகளாக வெளிப்படுத்துகிறீர்களா? இத்தகைய எண்ணங்கள் உங்களுக்குள் இருந்தால், அங்கே இன்னும் சில 'புளித்த மாவு துணிக்கைகள்' மீதமிருக்கக்கூடும்.



*உங்கள் சகோதர சகோதரிகள் மீது முன்பு இருந்ததை விட இப்போது அன்பு குறைந்திருப்பதாக உணருகிறீர்களா? ஒருவேளை அவர்களிடம் அதிகக் குறைகளைக் காண்கிறீர்களா? அவர்களுடன் பேச விரும்பாமல் இருக்கிறீர்களா? மனக்கசப்புகளை வைத்திருக்கிறீர்களா? அப்படியானால், அங்கே இன்னும் சிறிய புளித்த மாவு துணிக்கைகள் மீதமிருக்கக்கூடும்.*

*நம்முடைய வார்த்தைகளை எடுத்துக்கொள்ளலாமே! அவை வீணான வார்த்தைகளாக (idle words) இருக்கின்றனவா? ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நாம் கணக்கு ஒப்புவித்து வருகிறோமா அல்லது அவை மெதுவாக பெரும் குவியலாகக் குவித்து வைக்கப்பட்டு வருகின்றனவா? ஒருவேளை நாம் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவினால் அளிக்கப்படும் புண்ணியத்தினால் (merits) ஈடுசெய்யப்பட்ட நமது மனந்திரும்பினால் (repentance) நாம் குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுவோம். இல்லையெனில், கர்த்தரைக் கனவீனப்படுத்தும் வீணான வார்த்தைகள் நமக்கு எதிராக நின்று நம்மைத் தண்டிக்கும். அதன் பின்வரும் விளைவுகளை நாம் அனுபவிக்க வேண்டியிருக்கும்.*

***1.*** *முதல் விளைவு, நமக்கே காயத்தை ஏற்படுத்திக் கொள்வோம் (self-injury). ஏனெனில், தேங்கிக் கிடக்க அனுமதிக்கப்படும் ஒவ்வொரு தீய எண்ணமும் அல்லது வார்த்தையும் நம்முடைய குணத்தைக் கடினப்படுத்திவிடுவதோடுகூட, அது நம்மை அநீதியை நோக்கி நகர்த்திக்கொண்டு போய்விடும்.*

***2.*** *இரண்டாவது விளைவு, மற்றவர்களுக்கு ஒரு தவறான முன்மாதிரியாக அமைவதோடுகூட, அவர்களுக்குள் தீமையைத் தூண்டிவிடுபவர்களாகி விடுவோம். "**மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்**" (**நீதிமொழிகள் 15:1**) என்பதை நாம் நினைவுகூருகிறோம்.*

*ஞானமற்ற, அன்பற்ற வார்த்தைகளைப் பேசுவதன்*

*விளைவாக, நம்மைச் சுற்றிச் சிக்கல்களை உண்டுபண்ணிடுவதற்கு வாய்ப்புள்ளது; இவை நம்மைச் சுயகட்டுப்பாடு மற்றும் மற்றவர்களின் உணர்வுகளுக்கும் கருத்துகளுக்கும் மதிப்பளித்தல் ஆகிய பாடங்களைக் கற்றுக்கொடுக்கும் 'தண்டனைக்குரிய நீதி சரிக்கட்டப்படும்' கருவிகளாக மாற நேரிடும்.*

*சில நேரங்களில், நம்முடைய சொந்தத் தவறுகளின் விளைவாக ஏற்படும் சோதனைகளுக்காக, கர்த்தர் மீதோ அல்லது பிசாசின் மீதோ பழி சுமத்தப்படுகிறது. முதலில் தங்களுக்குள் இருக்கும் பிரச்சினையின் காரணத்தைக் கண்டறியாமல், வெறுமனே கர்த்தரிடம் அவற்றை நீக்கிப்போடும்படிக்கு ஜெபம் செய்வது என்பது பயன் தராது! கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதன் மூலமும், தீவிரமான சுய-சீர்செய்தலின் (vigorous self-discipline) மூலமும் தங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் அவர்கள் நீக்கிப்போட வேண்டும். "**நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்**" (1 **கொரிந்தியர்** 11:31, 32). "**அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்**" (**யாக்கோபு** 1:14).*

*நாம் குறிப்பிட்டது போல, எதற்கெடுத்தாலும் மற்றவர் மீது பழி போடுவதுதான் மனிதருடைய இயல்பான போக்காகும்! நாம் பொறுமை இழந்ததற்கும், நாம் அவ்விதம் பேசியதற்கும், நாம் இவ்விதம் செயல்பட்டதற்கும் அடுத்தவர்கள்தான் காரணம் என்று நினைப்பதுதான் மனித இயல்பு! "அவன்(ள்)தான் என்னை இப்படிச் செய்ய வைத்தான்(ள்)" "எல்லாரும் என்னைப் போலவே நியாயமான மற்றும் தாராளமான குணம் கொண்டிருந்தால், எங்கள் குடும்பம் அல்லது எங்கள் சபை சொர்க்கப்பூமியாக இருக்கும்" – இப்படிப்பட்ட எண்ணங்களால் நம்மில் எத்தனை பேர் நம்மை வஞ்சித்துக்கொள்கிறோம்?*

*நம்மை நாமே சோதித்துப் பார்ப்போமாக. நாம் மிகுந்த*

*மனத்தாழ்மையுடன் இருப்போமாக, இல்லையெனில், நம் இருதயத்தில் இருக்கும் மட்டமான தற்பெருமை மற்றும் சுய-திருப்தியான வார்த்தைகளே நமக்குத் தண்டனையைக் கொண்டு வந்துவிடும்.*

***"உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே."** (லூக்கா 6:32, 33).*

*" **தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்"** (1 பேதுரு 2:19 – 21).*

*நம்முடைய பாடுகள் நீதியினிமித்தம் மட்டுமே ஏற்படுகின்றனவா என்பதை உறுதி செய்வோமாக. நம்முடைய பரம்பரை குறைபாடுகளால் அல்லது நாமே வளர்த்திக் கொண்ட குறைபாடுகளால் ஏற்படும் உபத்திரவங்களுக்காகத் தேவன் மீதோ அல்லது நம் சகோதரர்கள் மீதோ பழி சுமத்த வேண்டாம்.*

*" **நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடிய வனுமாயிருக்கிறான்"** (யாக்கோபு 3 : 2 ) என்று வேதாகமம் சொல்வதை நாம் அங்கீகரிக்கிறோம். இருப்பினும், 'அப்படிப்பட்ட*

*ஒரு மனுஷனைக் காண்பது அரிது!' என்பதையும் நாம் உடனே உணர்ந்துகொள்ளுகிறபடியால், எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தவும், தேவபயத்தோடு பரிசுத்தத்தைப் பூரணப்படுத்தவும் நாம் அநுதினமும் பிரயாசப்படுவதோடுகூட, நமது மீட்பரும் பரிந்து பேசுபவருமானவரின் (Redeemer and Advocate) புண்ணியங்களை நாம் இடைவிடாமல் மன்றாடிக் கேட்கவும் வேண்டும்.*

*இதை கருத்தில் கொண்டவர்களாய், கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் பின்வரும் பேதுருவின் வார்த்தைகளை மேன்மேலும் புரிந்து வைத்துக்கொள்ள முயற்சிப்பார்கள் என்று நம்புகிறோம்:* ***"நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்!" (2 பேதுரு 3:11).*** *பின்னர் அவர் தொடர்ந்து கூறுகையில்,* ***"தேவ சாயலில் (God's likeness), நிச்சயமாக, தீங்கு விளைவிக்கும் புறணி பேசுதல், அசுத்தமான அல்லது பரிசுத்தமற்ற உரையாடல்கள், நேர்மையற்ற அல்லது கலகத்தனமான வார்த்தைகள் போன்றவை உள்ளடங்கியிருக்க முடியாது" (R4805:5)*** *"கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லும் எவரும், நேர்மையோடும் உண்மையோடும், இத்தகைய காரியங்களைத் தங்களை விட்டு அப்புறப்படுத்த வேண்டும்" என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. கர்த்தரிடம் நம்முடைய கணக்குகளைத் தினசரி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மனம்திரும்பப்படாத அல்லது மன்னிப்பு பெறப்படாத வீணான வார்த்தைகளின் கணக்கு எதுவும் நமக்கு எதிராக நில்லாமலிருக்கும்படிக்கு உறுதி செய்து கொள்வோமாக.* ***"எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்." (பிலி. 1:27) "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." (பிலி. 4:8)*** *இருதயத்தின் நல்ல பொக்கிஷத்திலிருந்து மட்டுமே நம்மால்*

*சத்தியமான மற்றும் தெளிந்த புத்தியுள்ள வார்த்தைகளைப் பேச முடியும்.*

*சமீபகாலமாக, நமது சகோதர சகோதரிகளைப் பற்றி எவ்வளவு தவறான தகவல்கள் பரப்பப்படுவது குறித்துக் கேள்விப்படுகிறோம் அல்லவா? [**<u>பேச்சாளர் 40+ ஆண்டுகள் முன்பு, தனது நாளில் நடந்த உதாரணத்தைக் குறிப்பிடுகிறார்:</u>** குறிப்பாக நமது நோய்வாய்ப்பட்ட சகோதரர்களின் உடல்நிலை குறித்த தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும்போது, நமது தகவல் தொடர்பு சரியானபடிக்கு நடப்பதில்லை. ...] எனவே, நாம் செய்திகளைச் சரியாகப் புரிந்து கொள்வதில்லை என்றே தோன்றுகிறது. மேலும் நமது சகோதரர்களின் நம்பிக்கைகள் மற்றும் உபதேச நிலைப்பாடுகள் குறித்த தவறான தகவல்கள் பரப்பப்படுவதையும் நாம் கவனிக்கிறோம். சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து (மூல ஆதாரத்திலிருந்து) தகவலை நாம் கேட்டுவிட்டு, அதிலும் நாம் அந்தத் தகவலைச் சரியாகப் புரிந்து கொண்ட பிறகு மாத்திரமே, அதை நாம் மற்றவர்களுக்குத் தெரிவிக்கலாம். ஆனால் அதை இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் நபர் வழியாகக் கேட்டால், அது வெறும் வீண் வார்த்தைகளே (உண்மை குறைவுபட்ட வார்த்தைகளாகி விடும்).*

*அப்பத்திலும் இரசத்திலும் பங்குபெறுவதற்கு முன்பாக, இந்தப் புளித்த மாவின் துணிக்கைகளை வெளியேற்றி சுத்தம் செய்ய வேண்டிய நேரம் இதுவேயாகும்.*

## 3. நான் புத்திமதிகளையும் அறிவையும் விரும்புகின்றேனா?

*இதற்குரிய வேத வசனம், **சங்கீதம் 141:5** – “ **நீதிமான்***

***என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத் தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம்பண்ணுவேன்."***

*தேவனுடைய வார்த்தையிலும் அவருடைய மேற்பார்வைகளிலும் நான் அநுதினமும் புத்திமதிகளையும், அறிவுரைகளையும் நாடித்தேடுகின்றேனா? கடிந்து கொள்ளுதலைச் செவிமடுத்துக் கருத்தில்கொள்ள நான் எப்போதும் ஆயத்தமாக இருக்கிறேனா? அல்லது நான் அதை வெறுத்து ஒதுக்குகிறேனா?*

***[R5693: பக்கம் 156]***

### *"நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி"*

*"ஜெபத்தின் மூலமாகவும், கர்த்தருடைய ஏற்பாடுகளுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய நாடுகிறவர்களாக இருப்பதன் மூலமாகவும், தேவனோடு ஐக்கியம் கொண்டிருக்கும் வகுப்பார், **சங்கீதம் 141**-இல் சங்கீதக்காரன் கூறியது போல, நீதிமான்களால் கடிந்துகொள்ளப்படும் போது வருத்தப்பட/புண்பட மாட்டார்கள் – மாறாக, இவர்களுக்கு அந்தக் கடிந்துகொளுதல், பூர்வ காலங்களில் ஒரு விருந்தினர் உபசரிப்பு அளிப்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நறுமண தைலத்தைப் போல இருக்கும். ஜெபத்தின் மூலம் தேவனோடு ஐக்கியம் கொண்டுள்ள கிறிஸ்தவரைப் பாருங்கள், அப்போஸ்தலர் விவரிக்கும் ஆவியின் கனிகளாகிய சாந்தம், தயவு/கனிவு, பொறுமை, நீடிய சாந்தம், சகோதர சிநேகம், அன்பு என்பவைகளை இருதயப் பண்புகளாக கொண்டிருப்பார்கள் (**கலாத்தியர் 5:22, 23; 2 பேதுரு 1:5 – 8**). அவர்கள் இப்பேர்ப்பட்ட குணங்களைக் கொண்டிருப்பதால், அவர்கள் எளிதில் வருத்தப்பட/புண்பட மாட்டார்கள், மாறாக கர்த்தருடைய மேற்பார்வை அவர்களுக்குத் தரும் அனுபவங்களையும் பாடங்களையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதில் சந்தோஷமே அடைவார்கள் – குறிப்பாக இவை சகோதர*

*சகோதரிகள் மூலமாக வரும்போது, அதுவும் அந்தச் சகோதர சகோதரிகள்* ***கலாத்தியர் 6 : 1*** *- இல் சொல்லப்பட்டபடி தாங்களும் சோதிக்கப்படாதபடிக்குத் தங்களைத் தாங்களே காத்துக்கொண்டு, சாந்தத்தோடு, கிறிஸ்துவ முறையில் இந்தக் கடிந்துகொள்ளுதலைச் செய்யும்போது அது ஏற்புடையதாக இருக்கும்.*



*அத்தகைய சந்தர்ப்பங்களில், அதே ஆவியோடு கொடுக்கப்பட்டு, அதே ஆவியோடு பெறப்படும் கடிந்துகொள்ளுதலானது கர்த்தரிடமிருந்து வரும் ஆசீர்வாதமாக இருக்கும். அத்தகைய வேதாகமப்பூர்வமான கடிந்துகொள்ளுதல்களால் அவர்களின் தலைகளோ இருதயங்களோ நொறுங்கிப் போவதில்லை.*

*மேலும் அவர்கள், காயப்படுத்துவதற்காக அல்லாமல், உதவுவதற்கேதுவாக, மற்றவர்களுக்கும் இதே முறையில், புத்திமதி கூறக் கற்றுக்கொள்கிறார்கள். ஒருவருக்கொருவர் வரும் இக்கட்டுகளில் ஒருவர் மற்றவருக்காக ஜெபம்பண்ணுவார்கள். அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு, இக்கட்டுப் போன்று தோன்றும் ஆபத்துகளும், வாழ்வின் சகல காரியங்களும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும்.''*

இந்த ஆலோசனையையும் கடிந்துகொள்ளுதலையும் நாம்

*மதித்துணருகிறோமா? அல்லது "நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல யாருக்கும் உரிமையில்லை" என்கிற உலகப்பிரகாரமான மனப்பான்மை நமக்குள் நுழைந்து விடுகிறதா? இது நமது இருதயம் எனும் அமைதியான மறைவான இடங்களில் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.*



**4. என் வாழ்க்கையில், (பிள்ளையாக,) கணவனாக, மனைவியாக, தந்தையாக, தாயாக என் குடும்பத்தில் ஆற்ற வேண்டிய பொறுப்புகளில் எனக்கென்றுள்ள என் பங்கை நான் உண்மையுள்ளவனா(ளா)க நிறைவேற்றுகிறேனா?**

இதற்குரிய வேத வசனம், ***1 தீமோத்தேயு 5:8 – "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்."***

பாருங்கள், மகன் ஒருவன் ஆலயத்திற்குப் பெருந்தொகையை வழங்கினால், அதன் பிறகு அவன் தன் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளிலிருந்தும் ஆதரவிலிருந்தும் விடுவிக்கப்படலாம் என்று கூறி, தேவனுடைய கற்பனையை அவமாக்கின பரிசேயர்களை இயேசுவே கடிந்துகொண்டதை நாம் நினைவுகூரலாம். ***(மத்தேயு 15:4 – 6)***

இப்பேர்ப்பட்ட தேவனுடைய கற்பனையை கர்த்தர் இரத்து செய்வார் என்று நாம் நினைக்கலாமா? இயேசு தாமே தமது மரண நேரத்திலும்கூட, தன் தாயை நினைவுகூர்ந்து, அம்மையாரை யோவான் சீஷனிடம் ஒப்படைத்ததை நாம் நினைவில் கொள்கிறோம். இப்படியிருக்க பெற்றோரைக் கைவிடுமாறு அவர் மற்றவர்களுக்குப் போதித்தார் என்று நாம் சொல்ல முடியுமா?



பெற்றோரைப் பார்த்துக்கொள்வதில் எவ்வளவு நேரமும் கவனமும் கொடுக்கப்பட வேண்டும் அல்லது தேவைப்படுகிறது என்பது அவரவர் சூழல் பொறுத்தது என்றாலும், அந்தக் கடமை நம்முடையது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கிறிஸ்துவின் ஆவியின் செல்வாக்கின்கீழ், இயேசுவின் போதனைகளை விவரித்துக் கூறிய அப்போஸ்தலனாகிய பவுல், "**புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.**" என்று **எபேசியர்** 5:25, 27-இல் கூறினார். நிச்சயமாக அவர் இதில் போதகருக்கு முரணாகச் சொல்லவில்லை. இயேசுவின் சீஷர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள், தங்கள்

*குடும்பத்தைப் பராமரிக்கத் தவறினால், அவர்கள் அவிசுவாசிகளை விட மோசமானவர்கள் என்றும், அத்தகைய போக்கின் மூலம் அவர்கள் கர்த்தரின் உண்மையான போதனைகளை மறுதலிக்கிறார்கள் என்றும் அதே அப்போஸ்தலன் எழுதினார்.*

***"மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" (எபேசியர் 5:22.)***

***" சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்." (எபேசியர் 5:24)***

*இந்த விதிகளும் ஒழுங்குமுறைகளும் பல நூற்றாண்டுகளாக மாறவில்லை. உலகத்தின் செல்வாக்கும், நமது தற்போதைய சமுதாயமும்தான் இந்த அர்த்தங்களை மாற்றி, நீங்கள் அடையாளம் காணக்கூடிய அனைத்து வகையான சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது. நமது இருதயத்தின் அந்தரங்க அறைகளில் இந்தக் கடமைகளைக் குறித்து ஆராய்ந்து பார்ப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.*

*அடுத்து, சில பெற்றோர்களே தங்கள் சொந்த பிள்ளைகளுடன் தொடர்புடைய பாக்கியத்தையும் பொறுப்புகளையும் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது.* ***நீதிமொழிகள் 22:6****-ஆம் வசனத்தை நாம் நினைவுகூருகிறோம், "****பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.****" குடும்பத்தில் வளர்ந்து வரும் பிள்ளைகளைக் கொண்டுள்ள ஒரு கிறிஸ்தவ தாயோ (அல்லது பாட்டியோ) நீதி மற்றும் கர்த்தருக்குப் பயப்படும் பயபக்தி என்பவற்றைச் சார்ந்த போதனைகளை வழங்குவதில், வீட்டிலும் சரி, சபையிலும் (Ecclesia) சரி, தனது தாலந்துகளையும் திறன்களையும் பயன்படுத்துவதற்கு, நிச்சயமாக பரந்த வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.*

*பிள்ளைகளால் மதக் கோட்பாடுகளையும் ஆவிக்கேற்ற*

*நடத்தையையும் மதித்துணர / புரிந்துகொள்ள முடியாது என்றும், அது அவர்களுக்கு மிகவும் கடினம் என்றும் நினைப்பது அடிக்கடி ஏற்படக்கூடிய ஒரு தவறாகும். சில நேரங்களில் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் போதனைகளும் பாடங்களும், நடைமுறை பயன்பாடுகள் (practical applications) குறித்துச் சொல்லிக்கொடுக்கப்படாமல், வெறும் கதை சொல்லுதலோடு நின்றுவிடுகின்றன. பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட அளவிலான சீர்கேடு மற்றும் தீமையின் மீதான நாட்டத்துடனேயே பிறக்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் (**சங்கீதம் 51:5**).*

*இருப்பினும், அவர்களின் குட்டி உள்ளங்கள் பெரிய வெற்று வெள்ளை காகிதத்தைப் போன்றவையாகும், அதன் மேல் நன்மையான அல்லது தீமையான கொள்கைகள் ஆழமாகப் பதியப்படுவது உறுதி.*



*ஒருவேளை நீங்கள் நீதியோடும், அன்போடும், இரக்கத்தோடும், பொறுமையோடும், ஒழுக்கத்தோடும் உங்கள் பிள்ளைகளை வழிநடத்தாவிட்டால்; இவை தெய்வீகத் தேவைகள் மற்றும் அவர்களின் புத்தியுள்ள ஆராதனை என்று அவர்களுக்குக் கற்றுக்கொடுக்காவிட்டால்; வாழ்க்கையின் பல்வேறு சீரழிந்த தாக்கங்களோடு அவர்கள் தொடர்புக்குள்ளாக வரும்போது, எதிர்மாறானவையே அவர்களுக்குக் கற்பிக்கப்படும் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம்.*

*என்னதான் பெற்றோர்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்தாலும்,*

*அந்தச் சிறுவர்களை வளர்க்கும் மற்றும் போதிக்கும் பொறுப்பை மற்றவர்களிடமே விட்டுவிடும் ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம்.* *அவர்கள் அதைத் தாத்தா, பாட்டி, குழந்தை பராமரிப்பாளர்கள், சிறுவர் பள்ளிகள், ஞாயிறு பள்ளிகள் எனப் பிறரிடம் விட்டுவிடுகிறார்கள். நமது கடமையும் பொறுப்பும் சீரிய ஒன்றாகும், அதற்கென்று காலத்தை ஒதுக்கி, பிரயாசத்தையும் ஏறெடுக்க வேண்டும், மேலும் நமது இருதயத்தின் அமைதியான மறைவிடத்தில் அதற்கென்று அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.*

## 5. நாம் கழுவப்பட்டு சுத்தமாக்கப்பட்டுக் காணப்படுகிறோமா, அது மாத்திரமல்லாமல் அந்த நிலையிலேயே நம்மைக் காத்துக்கொள்கிறோமா?

*இதற்குரிய வேத வாக்கியம், **2 தீமோத்தேயு** 2:21 – **"ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்."***

*நல்லொழுக்கம் சார்ந்த சீர்திருத்தங்கள் எப்போதும் சரியான திசையில் ஏறெடுக்கப்படும்போது, அவை பாராட்டத்தக்க படிகளாக இருக்கின்றன. பாருங்கள், நமது உலக நண்பர்கள் சிலரும்கூட, தங்கள் கெட்ட பழக்கவழக்கங்களிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுபட எண்ணி, அதற்கான முயற்சிகளை ஏறெடுக்கும்போது, நமக்கு மகிழ்ச்சியாக உள்ளது.*

*ஆனால், மாம்சத்தின் அழுக்கிலிருந்து (அசுசியிலிருந்து) சுத்திகரிக்கும் இத்தகைய முயற்சிகள் ஒருபோதும் எஜமானுடைய*

*பயன்பாட்டிற்குத் தகுதியுள்ள அத்தகைய பாத்திரத்தை உருவாக்க முடியாது. அவர்களின் சுத்திகரிப்பு முயற்சிகள் அனைத்தையும் தாண்டி, அவர்கள் இன்னும் அசுத்தமாகவே இருக்கிறார்கள், கர்த்தர் தமது பயன்பாட்டிற்குச் சுத்தமான பாத்திரங்களையே விரும்புகிறார்.*

*நமது மீட்பரின் சுத்திகரிக்கும் இரத்தத்தில் விசுவாசத்தினால் நாம் மூழ்கி எழும்போது மட்டுமே, நாம் சுத்தமாகவும் தேவனுக்குப் பிரியமானவர்களாகவும் மாறுகிறோம். ஆனால் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, சுத்தமான கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை அணிந்துகொண்ட பிறகு, இந்தத் தரிப்பிக்கப்பட்ட நீதியை (reckoned righteousness) நமது திராணிக்கேற்ப நிஜமான ஒரு விஷயமாக மாற்ற நாம் பாடுபடுவது மிகவும் முக்கியமாகும். ஏனெனில் இந்த வழியில் மட்டுமே அவருடைய தரிப்பிக்கப்பட்ட நீதியைப் (imputed righteousness) பெற்றுக்கொள்வதற்கு நாம் பாத்திரவான்கள் என்பதை நிரூபிக்க முடியும். நாம் உண்மையில் நீதிமான்களாக மாறுவதற்கு முன்பே தேவன் நம்மை நீதிமான்களாகக் கருதுவது முற்றிலும் தெய்வீகக் கிருபையால்தான்! நம்மிடம் உள்ள 'நீதிமானாய் இருக்க வேண்டும்' என்ற விருப்பத்தையும், அவர் நியமித்த வழியில் அதற்காக ஏறெடுக்கும் முயற்சியையும் கண்டு, தேவன் கிரியைக்குப் பதிலாக சித்தத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இப்போது நம்மை நீதிமான்களாகக் கருதுகிறார். மேலும் நாம் சாபத்திலிருந்து மீட்கப்பட்டு, ஒப்புரவாகுதலுக்கான அவருடைய மகிமையான, கிருபையுள்ள ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டதினால், அவர் நம்மை குமாரர்களாகவும் நடத்துகிறார்.*

*தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டு நீதிமான்களாகக் கருதப்பட்ட பிறகு, நமக்கு இனி நீதியின் மேல் அன்பு இல்லை என்கிற ரீதியில் நம்முடைய நடத்தை மாறுமேயானால்; நாம் பாவத்தின் புளித்த மாவை அகற்றுவதற்கான தொடர்ச்சியான முயற்சியின் மூலம், தரிப்பிக்கப்பட்ட நீதியை ஒரு நிஜமான விஷயமாக மாற்றுவதற்கு நாம் முயற்சி செய்யவில்லை என்றால்; கொஞ்சம் புளிப்பு மீதம் இருந்தால் இருக்கட்டும் என்று நாம்*

திருப்தியடைந்து, நமக்குள் அதனைச் செயல்பட அனுமதித்து, அதை எதிர்த்துப் போராடத் தவறினோமேயானால், இப்படிப்பட்ட போக்கின் மூலம் நீதியின் மீதான நமது அன்பு பலவீனமடைந்து வருவதையும், நமக்காக கர்த்தர் காட்டிய கிருபையுள்ள கணக்கிற்கு நாம் தகுதியற்றவர்கள் என்பதையும் நிரூபிக்கிறவர்களாய் இருப்போம்.

ஆனால் அதற்கு மாறாக, நாம் அநுதினமும் பழைய புளித்த மாவை வெளியேற்றப் பாடுபட்டோமேயானால்; அதை எப்போதாவது ஒருமுறை மட்டும் அடக்கி வைக்காமல், மீண்டும் மீண்டும் அது புளித்து முழு ஆவிக்குரிய தன்மையையும் சீர்குலைக்க விடாமல், அதைத் தொடர்ந்து எதிர்த்துப் போராடினோமேயானால் — அதாவது, சத்தியத்தைக் கொண்டு நமது எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களைச் சுத்திகரித்து, ஆவியின் கனிகளையும் கிருபைகளையும் வளர்த்துக் கொண்டோமேயானால் — அப்போது அப்போஸ்தலன் உறுதிகொடுப்பது போல நாம் உண்மையாகவே "**எஜமானுக்கு உபயோகமான பாத்திரங்களாக**" இருப்போம்; அத்துடன் நாம் தொடர்ந்து அதற்கெதிராக விழிப்புடன் இருக்கவும் வேண்டும். இந்த நம்பிக்கையை தங்களுக்குள் கொண்டிருப்பவர்கள் அனைவரும் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். உலகம், மாம்சம் மற்றும் பிசாசு ஆகியவை நம்மை முழு முதிர்ச்சிக்கு நேராய் வளர விடாமல் தடுப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது.

உதாரணமாக, கடந்த சில ஆண்டுகளில், ஜப்பானியர்கள் ஒரு மரத்தைக் கொண்டு வந்ததை நாம் கவனித்தோம், அதை அவர்கள் ட்ரே ட்ரீ (tray tree), அல்லது 'போன்சாய்' (bonsai) மரம் என்று அழைக்கிறார்கள். அந்தச் சின்ன அளவிலான மரங்களில் கிளைகளும், பச்சை இலைகளும் காணப்படும் – அவற்றில் சில மிகவும் தனித்துவமானவை மற்றும் அழகானவையாக இருக்கும். அந்த மரத்தின் வேர்களை வெட்டுவதன் மூலமோ, தண்ணீரைத் தடுப்பதன் மூலமோ, நிழல் கொடுப்பதன் மூலமோ, உரத்தைத் தடுப்பதன் மூலமோ, அதன் அளவு மற்றும் பலன் போன்றவற்றில்

என்ன மாற்றத்தை வேண்டுமானாலும் உண்டுபண்ண முடியும் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். ஆனால், அது அதன் முழுப் பலனை அடையாது மற்றும் ஒரு முழு வளர்ச்சியடைந்த மரத்தைப் போலத் தோன்றவும் செய்யாது.

இதனை ஓரளவுக்கு கிறிஸ்தவ ஜீவியத்திற்கும் ஒப்பிட்டுச் சொல்ல முடியும் என்று நாங்கள் நினைக்கிறோம். எப்படியெனில், உலகம், மாம்சம் மற்றும் பிசாசு என்பவைகளின் காரியங்களை கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் நுழைய அனுமதித்தால், அவை அவனுக்குத் தேவையான தண்ணீர், தேவையான கத்தரித்தல் *(pruning)*, உரமிடுதல் போன்றவை கிடைக்கச் செய்யாமல், அவனது வளர்ச்சியைத் தடுத்துவிடும். வேறொரு அழுத்தமான பாஷையில் சொல்ல வேண்டுமானால், உலகம், மாம்சம் மற்றும் பிசாசு ஆகியவற்றிற்கு எதிராக ஒரு நல்ல போராட்டத்தைப் போராட முயற்சிப்போமாக! நாம் பார்த்திட்ட இந்தக் கடமைகளை நிறைவேற்றுவது என்பது சாதாரணமான விஷயமல்ல, அது ஒரு வாழ்நாள் பணியாகும் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும், மேலும் முடிவிலும்கூட, நமது குணாதிசயத்தின் மீதமுள்ள குறைபாடுகளை மூடிமறைப்பதற்கு கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் நமக்குத் தேவைப்படும் என்பதை உணர்ந்து கொள்வோம்.

## முடிவுரை

ஆண்டவருடைய நினைவுகூருதல் காலத்தை *(memorial season)* நாம் நெருங்கி வரும் இந்தச் சமயத்தில், நாம் நமது இருதயத்தின் மறைவான இடங்களை அலசி ஆராய்ந்து பார்ப்போமாக. இருதயத்தின் அமைதியான மறைவினில், ஆண்டின் வசந்த காலத்தைப் போல, ஆவிக்குரிய அற்புதமான விஷயங்கள் நடக்கின்றனவா என்று பார்ப்போமாக!

சுருக்கமாக, பின்வரும் காரியங்களில் நம்மை நாம் நிதானித்துப் பார்ப்போமாக:

1. *என் இருதயம் சுத்தமாகவும் நேர்மையாகவும் இருக்கின்றதா?*
2. *என் சிந்தனைகளில்கூட புளிப்பு காணாதபடாதபடிக்கு விழிப்புடன் காவல் செய்கிறேனா?*
3. *புத்திமதியையும் அறிவையும் நான் விரும்புகின்றேனா?*
4. *(பிள்ளையாக,) கணவனாக, மனைவியாக, தந்தையாக, தாயாக என் வாழ்க்கையில் எனக்கென்றுள்ள பங்கையும் பொறுப்பினையும் உண்மையுள்ளவனா(ளா)க நிறைவேற்றுகின்றேனா?*
5. *நான் அந்தக் கழுவப்பட்ட மற்றும் சுத்தமான நிலையிலேயே என்னைக் காத்துக்கொள்கிறேனா?*

*நாம் உண்மையுள்ளவர்களாக இந்த விஷயங்களை நிறைவேற்றுவதற்கு பெரும் முயற்சிதனை ஏறெடுத்து, நினைவுகூருதல் ஆராதனையின் (memorial service) மன அமைதியான தருணத்தில் நாம் பாத்திரவான்களாகப் பங்கேற்பதற்கேதுவாக தேவன் தாமே நம்மை வழிநடத்துவாராக!*

*ஆமென்!*

***[<u>பின்னிணைப்பு:</u>***
***"Poems of Dawn" –***
***இலிருந்து எடுக்கப்பட்ட சில ஆறுதலான கவிதைகள் அடுத்து வரும் பக்கங்களில் காண முடியும்]***



# அவர் சமுகத்தின் மறைவிடத்தில் ...

***(எலன் இலக்ஷ்மி கோரே என்பவரால் எழுதப்பட்ட கிறிஸ்தவப் பாடலின் தமிழாக்கம்)***

*அவர் சமுகத்தின் மறைவிடத்தில் மறைந்துகொள்ளவே*
*எவ்வளவாய் எந்தன் ஆத்துமாவும் பிரியப்படுகின்றதே:*
*இயேசுவின் பாதத்தருகே நான் கற்கும் பாடங்களோ*
*ஓ! எத்துணை அருமையானவையே.*
*இம்மைக்குரிய கவலைகள் என்னை வருத்தினாலும்*
*சோதனைகள் என்னை ஒருபோதும் மாய்த்துவிடாதே,*
*சாத்தான் என்னைச் சோதிக்க நெருங்குகையிலே*
*உம் மறைவிடமே என் தஞ்சமாகுமே.*

*என் ஆத்துமா சோர்ந்து தாகமாயிருக்கையிலோ,*
*அவர் செட்டைகளின் நிழலின்கீழன்றோ*
*குளிர்ச்சியான இனிய புகலிடமும்*
*தெளிந்த நீரோடையும் எனக்கு உண்டல்லவோ!*
*என் இரட்சகர் என்னை அரவணைத்து அமர்ந்திடவே,*
*அந்த இனிமையான ஐக்கியத்தில் மூழ்கினோமே;*
*அவ்வாறு சந்திக்கையில் அவர் உதிர்க்கும் வார்த்தைகளை,*
*நான் முயன்றாலும், என்னால் விவரிக்க இயலாதே.*

*ஒன்று மட்டும் செய்தேனே: அவரிடம் என் ஐயங்கள்,*
*துயரங்கள், அச்சங்கள் யாவையும் இறக்கி வைத்தேனே;*
*அவரோ நீடியபொறுமையாய்ச் செவிகொடுத்தே*
*வாடும் என் உள்ளத்தைத் தேற்றுகின்றாரே!*
*அவர் என்னை கண்டிப்பதில்லை என எண்ணுவீரோ?*
*என்னில் அவர் காணும் குறைகளை,*
*என்னிடம் அவர் சொல்லாவிடில்,*
*அவர் சிநேகிதம் பொய்யாய்ப் போய்விடுமன்றோ?*

*பிரியமில்லாத என் சொல்லையும் எண்ணத்தையும்*
*பிரித்தெடுத்து அவர் உணர்த்தாவிடில்*

*அவரை என்னால் இவ்வளவாய் நேசிக்க இயலுமோ?*
*இல்லை! அவரோ அதி உண்மையுள்ளவரன்றோ,*
*அதினாலே அவரில் நான் இன்னும் நம்பிக்கை கொள்வேனே;*
*சிலநேரம் அவர் எனக்கு கடும் காயத்தை ஏற்படுத்தினாலும்*
*அப்போதும் அவர் என்னில் அன்பு கூருவதை நான் அறிவேனே.*

*ஆண்டவரின் இந்த மறைவிடத்தின்*
*இனிமைதனை நீங்களும் அனுபவிக்க வேண்டுமா?*
*அவர் நிழலின்கீழ் ஓடி தஞ்சம் புகுந்திடுங்கள்,*
*அதுவே உங்களின் நற்பலனாகுமே.*
*மகிழ்ச்சி நிறைந்த அந்த மறைவிடத்தின்*
*அமைதிதனை நீங்கி வெளிவரும்போதெல்லாம்,*
*உங்கள் முகத்தில் உங்கள் எஜமானரின் சாயலை*
*ஏந்தி வாருங்கள் – அது போதுமே!*

## பொறுமை

*இனிப்பான செந்நிற திராட்சரசம் வேண்டுமெனில்,*
*ஊதா நிறத் திராட்சப்பழங்கள் நசுக்கப்பட வேண்டுமே;*
*கசடுகள் நீங்கித் தங்கம் மிளிர வேண்டுமெனில்,*
*உலைக்களத் தீ உக்கிரமாய் எரிய வேண்டுமே.*
*சாணைச் சக்கரத்தின் கொடிய உராய்வு இல்லையெனில்,*
*இரத்தினக்கல்லின் ஒளி எப்படித் தோன்றும்?*
*உலோகத்திற்கு உரசித் தேயும் மெருகூட்டல் இல்லையெனில்,*
*போர்வாளின் முனை எப்படிப் பிரகாசிக்கும்?*

*என் ஆத்துமாவே! ஆவியின் கனிகளை நீ*
*வேறு எவ்விதம் சுதந்தரிக்க முடியும்—*
*ஆசீர்வதிக்கவே காயப்படுத்தும் அந்தத் திருக்கரத்திற்கு,*
*அன்புடன் உன்னை நீ ஒப்புக்கொடுக்காவிடில்?*
*ஆகவே, மண்ணுலகின் கசடுகளைத் தீ சுட்டெரிக்க,*
*பொறுமையுடன் உன்னை அர்ப்பணித்திடுவாயே —*
*சிலுவை சுமக்க மறுப்பாயானால்,*
*கிரீடம் சுமப்பேன் என எதிர்பாராதே!*

# நம் சுமை தாங்கி

*குத்தலான சிறு சிறு கவலைகளையும்,*
*சிக்கவைத்துத் தவிக்கவிடும் முட்செடிகளையும்,*
*நம்மை ஒருபோதும் கைவிடாத பரம சகாயனிடம்*
*கொண்டு செல்லலாமே, கொண்டு செல்லலாமே.*

*சென்று உள்ளத்தின் வேதனையும், நெடுநாள் ஏக்கங்களையும்,*
*அவரிடம் சொல்லுங்களேன், அவரிடமே சொல்லுங்களேன்;*
*என்ன செய்வதென்று அறியாது திகைத்து நிற்க, குலைந்துபோன*
*நோக்கங்களையும் சொல்லலாமே, அவரிடம் சொல்லலாமே.*

*நம் பலவீனங்கள் அனைத்தையும் அங்கே —*
*தெய்வீக வல்லமையுள்ளவரிடம் இறக்கி வைத்தே,*
*சுமைகளைச் சுமந்ததையே மறந்துபோகலாமே;*
*இனியதொரு பாடலையே சுமந்து செல்லலாமே,*
*நம்முடன் எடுத்துச் செல்லலாமே!*

---

BIBLE STUDENTS
Food for New Creature